**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 70/2022**

**Deposition of P.W. 1**

Name : ஆஸ்பின்

S/o, D/o, W/o :அமல்ராஜ்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated: 12.03.2025

Accused Present.

<u>முதல் விசாரணை</u>–

நான் செருப்பாலூரில் வசித்து வருகிறேன். நான் பெயிண்டராக வேலை பார்க்கிறேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். 17.10.2021ம் தேதி எங்களுக்குள் வாய்தகராறு ஏற்பட்டது. அதன் பிறகு 22.10.2021ம் தேதி இரவு 09.00 மணி முதல்09.30 மணியளவில் இளாமாங்கோட்டுவிளை பஞ்சாயத்து கிண அருகே தேவிடியா பயலே, புண்டாமோனே என்று பேசி காற்றாடி கம்பால் என் தலையை நோக்கி அடித்தார். நான் திரும்பி கொள்ள அது எனது இடது பக்க வயற்றில் பட்டது. தடுமாறி கீழே விழுந்தேன். ஐயோ, அப்பா என்னை காப்பாற்றுங்கள் என்று சத்தம் போட்டேன். எனது சித்தி, சித்தப்பா மற்றும் அப்பா ஆகியவர்கள் ஓடி வந்தார்கள். கம்பை காட்டி கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார். கம்பை துாக்கி மேலே எறிந்தார். குலசேகரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக போனேன். மேல்சிகிச்சைக்காக ஆசாரிப்பள்ளம் அரசு மருத்தவ கல்லுாரி

மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள். குலசேகரம் அரசு மருத்துவமனையில் நான் சிகிச்சையில் இருக்கும் போது போலீசாரிடம் புகார் மனு கொடுத்தேன். அந்த புகார் மனு அ.சா.ஆ.1. என்னிடம் காட்டப்படும் காற்றாடி கம்பால் தான் எதிரி என்னை அடித்தார். அது சா.பொ.1 போலீசார்என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சாட்சி ஆல்பின் எனது உடன் பிறந்த தம்பி. சாட்சி அமல்ராஜ் எனது அப்பா. சாட்சி செல்லப்பன் எனது சித்தப்பா, சாட்சி கலா எனது சித்தி. சாட்சி சார்லெட் எனது அம்மா. சாட்சி தாசன் எனது சித்தப்பா. சாட்சி ராஜையன் எனது மாமா. நாங்கள் கிறிஸ்தவ மதத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கு அருகே உள்ள இசக்கியம்மன் கோவிலில் எதிரி செயலர் பொறுப்பில் இருக்கிறார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. நான் சொல்வது போல் எனக்கும், எதிரிக்கும் முன்விரோதம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடக்கும் போது எனக்கு திருமணம் நிச்சையிக்கப்பட்டு தான் இருந்தது. நானும், எதிரியும் நண்பர்கள் இல்லை, ஊர்காரர்கள். 17.10.2021ம் தேதி வாய் தகராறுக்கு பிறகு இருவரும் நன்றாக பேசிக்கொள்வோமா என்றால் இல்லை. எதிரி கம்பால் எறிந்ததை போலீசார் விசாரணையில் சொல்லி இருந்தேன். எதிரி எறிந்த கம்பு எனது முகத்தில் பட்டது. வலது கண்ணுக்கு கீழே பட்டது, மேலும் உடலிலும் பட்டது. கம்பால் எறிந்ததில் எனக்கு இரண்டு காயங்கள் ஏற்பட்டது. மேற்படி இரண்டு காயங்களும் வீக்கக்காயங்கள் ஆகும். அந்த காயங்களுக்கு சிகிச்சை வழங்கபட்டது என்று காயச்சான்றை பார்த்தால் தான் சொல்ல முடியும். சம்பவ நடந்த இரவே மருத்துவமனைக்கு போனேன். இரவு 10.00 மணியளவில்

மருத்துவமனைக்கு போனேன். போலீசார் விசாரணையில் மறுநாள் மருத்துவமனைக்கு சென்றதாக கூறவில்லை. புகாரை நான் தான் எழுதினேன். புகாரை நான் தான் எழுதினேன். புகாரில் என்ன நடந்தது என்று எழுதினேன். புகாரில் தலையில் அடிக்க வந்த அடி மற்றும் மிரட்டிய விபரத்தை குறிப்பிட்டுள்ளேன். அம்மன் கோவிலிருந்து எனது வீட்டிற்கு செல்லும் வழியில் இடது பக்கம் கிணறு உள்ளது. கிணற்றிற்கு இரண்டு பக்கமும் ரப்பர் தோட்டம் உள்ளது. சம்பவ இடத்திலிருந்து 300 மீட்டர் கடந்து சுமார் 50 அடி பள்ளத்தில் எனது வீடு உள்ளது என்றால் சரியல்ல. குறைவான அளவு தான் பள்ளத்தில் உள்ளது. பள்ளம் எத்தனை அடி என்று எனக்குத் தெரியாது. சம்பவ இடத்தில் இருட்டாக இருந்தது என்றால் இல்லை. தெருவிளக்கு இருந்தது. அந்த பகுதி இருட்டான பகுதி என்றால் சரியல்ல. சம்பவத்திற்கு முன்னர் எனக்கு வேறு மருத்துவ சிகிச்சைகள் செய்யப்படவில்லை. போலீசார் என்னை இரண்டு முறை விசாரித்தார்கள். முதலில் மருத்துவமனையில் வைத்தும் இரண்டாவதாக வீட்டில் வைத்தும் விசாரித்தார்கள். 04.12.2021ம் தேதி என்னை வீட்டில் வைத்து விசாரித்தார்கள். நீதிமன்றத்தில் சொன்ன விபரங்களை 04.12.2021ம் தேதி போலீசாரிடம் சொன்னேன். கம்பை என் மீது தூக்கி எறிந்து விட்டு போனார். 4 அடி நீளமுள்ள ஒரே கம்பு மட்டும் தான் வைத்திருந்தார். அந்த கம்பு தான் சம்பவ இடத்தில் கிடந்தது. கோவிலில் முக்கியமான தினங்களில் ரேடியோ போடுவார்கள் என்றால் சரிதான். எங்கள் சர்ச்சிலும் பாட்டு போடுவார்கள். பாட்டு போடுவதை போடக்கூடாது என்று சொன்னதால் ஊர்காரர்களுக்கும், எனக்கும் விரோதம் உண்டு என்றால் சரியல்ல. அந்த விரோதத்தின் அடிப்படையில் எதிரி கோவிலின் செயலாளர் என்பதால் அவர் மீது பொய்யான புகார் கொடுத்தேன் என்றால்

சரியல்ல. புகாரை வேறு நபர்களின் துணையோடு கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் நடந்திருந்தால் அன்றே காவல்நிலையம் சென்று புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. என் அப்பாவை நான் வெட்ட போனதாக புகார் கொடுத்து விசாரணை நடந்ததா என்றால் இல்லை. நான் சொவ்லது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும், சாட்சிகள் பார்த்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. சம்பவம் நடைபெற்ற சாலையில் ஆட்கள் அதிகமாக செல்வார்கள் என்றால் சம்பவ நேரத்தில் யாரும் செல்ல மாட்டார்கள். 09.00 மணிக்கு மேல் யாரும் அந்த வழியாக செல்ல மாட்டார்கள். சம்பவ சாலையில் அதிகமான கூலிதொழிலாளிகள் செல்வார்கள் என்றால் சரியல்ல. சம்பவ நாளில் சம்பவ இடத்தின் அருகே வீடுகள் இல்லை. சம்பவ இடத்தின் அருகே வில்சன், தாசன், செல்வராஜ், மணிகண்டன், சந்தோஷ் ஆகியவர்கள் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். இந்த வீடுகளை 100 மீட்டர் தாண்டி என் வீடு உள்ளது என்றால் சரியல்ல. 50 மீட்டர் தாண்டி உள்ளது. சம்பவம் 15 நிமிடம் நடந்தது. என்னை அடித்து முடித்து கம்பால் எறிந்து என்னை அப்பா, சித்தப்பா, சித்தி வந்த உடன் ஓடி விட்டார். எனக்கு ஏற்பட்ட காயங்களுக்கும், எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC.70 /2022**

**Deposition of P.W.** 2

Name : அமல்ராஜ்

S/o, D/o, W/o : ரபேல்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:12.03.2025

Accused Present

<u>முதல் விசாரணை</u>–

நான் செலுப்பாலூர் இளாமான்கோட்டுவிளையில் வசித்து வருகிறேன். நான் கொத்தனராக வேலை பார்க்கிறேன். அ.சா.1 ஆஸ்பினும், மேலும் ஆல்பின் என்றும் எனக்கு இரட்டை குழந்தைகள் உள்ளனர். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.1 காதலித்து வந்த பெண்ணை எதிரி கேவலமாக பேசியதால் இருவருக்கும் பிரச்சனை. அ.சா.1 எதிரியை கூப்பிட்டு இனிமேல் அப்படி சொல்லக்கூடாது என்று சொன்னார். 17.10.2021ம் தேதி எனது மகனுக்கும், எதிரிக்கும் வாக்குவாதம் நடந்தது. 5 நாட்கள் கழித்து 22ம் தேதி சாயங்காலம் 09.00 மணிக்கு பஞ்சாயத்து கிணறு பக்கம் எனது மகன் வேலைக்கு சென்று விட்டு வரும்போது எதிரி கெட்டவார்த்தைகள் பேசி கற்றாடி கம்பால் எனது மகனின் தலையில் அடித்தார். ஆனால் என் மகன் விலகி கொள்ள அந்த அடி இடது பக்க வயிற்றில் பட்டது. எனது மகன் ஐயோ என்று சத்தம் போட்டதும். நானும்,

எனது தம்பி, மற்றும தம்பி மனைவி சம்பவ இடத்திற்கு போனோம். எதிரி கம்பை காட்டி எனது மகனை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டி விட்டு சென்று விட்டார். நாங்கள் காயம்பட்ட எனது மகனை குலசேகரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து போனோம். அ.சா.1 போலீசாரிடம் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

எனது மகன் என்னை வெட்டுக்கத்தியால் வெட்ட வந்ததாக நான் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் இல்லை. செருப்பாலூரிலிருந்து – இட்டகவேலிக்கு போகும் வழியில் கிணறு இடது பக்கம் உள்ளது. கிணற்றிற்கு அருகே வில்சன், தாசன், செல்வராஜ், மணிகண்டன், சந்தோஷ் ஆகியவர்கள் வீடுகள் உள்ளது என்றால் சற்று தள்ளி உள்ளது. சம்பவ இடத்திலிருந்து எங்கள் வீடு 50 அடி தூரத்தில் உள்ளது. செல்வன், கலா ஆகியவர்கள் வீடு 40 அடி தூரத்திலும், தாசன் வீடு 80 அடி தூரத்தில் நாங்கள் சம்பவ இடத்தின் பக்கத்தில் உள்ளதால் எங்களுக்கு நேரடியாகத் தெரியும். சம்பவ நேரத்தில் அந்த இடத்தில் ரோடு இல்லை தற்போது ரோடு போடப்பட்டுள்ளது. சம்பவ இடத்தில் தெரு விளக்கு உள்ளது. எதிரிக்கும், எனது மகனுக்கும் வாக்குவாதம் ஏற்பட்ட சத்தம் கேட்டு நாங்கள் போனோம். நாங்கள் போகும் போது எதிரி எனது மகனை அடித்தார். நான் சொல்வது போல் எனது வீடு சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை பார்த்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. புகாரை என் மகன் தான் எழுதிக்கொடுத்தார். அடிப்பட்ட உடன் எனது மகனை மருத்துவமனைக்கு அழைத்து சென்று விட்டேன். போலீசார் விசாரணையில் மறுநாள் மருத்துவமனைக்கு சென்றதாக கூறவில்லை. எதிரியால் எனது மகனுக்கு எவ்வித காயமும்

ஏற்படவில்லை என்றால் சரியல்ல. போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. போலீசார் என்னை விசாரித்தார்கள். நீதிமன்றத்தில் சொன்ன விபரங்களை போலீசாரிடமும் சொன்னேன். காற்றாடி கம்பு 4 அடி நீளம் இருக்கும். அந்த கம்பை நான் பார்க்கவில்லை. கம்பை சம்பவ இடத்தில் போட்டு விட்டு போனார். ஒரே கம்பு தான் ஆனால், அடித்ததில் ஒடிந்து விட்டது. போலீசாரிடம் இரண்டு துண்டு கம்புகள் என்று சொன்னேன். இரண்டு துண்டு கம்புகளை நீதிமன்றத்தில் பார்த்தேன். நீதிமன்றத்தில் பார்த்த பிறகு இரண்டு துண்டுகள் கம்புகள் என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் கம்பு உடைந்திருந்தால் போலீசார் விசாரிக்கும் போது இரண்டு துண்டு கம்புகள் என்று கூறியிருப்பேன் என்றால் அவ்வாறு தான் சொன்னேன். சா.பொ.1 நாங்கள் உருவாக்கி கொடுத்த ஆயுதம் என்றால் சரியல்ல. சா.பொ.1 ஐ எதிரி பயன்படுத்தவில்லை என்றால் சரியல்ல. பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.